DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

----

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.2 COURT, SATTUR

| | |
|---|---|
| Name : திரு.கணேசமூர்த்தி | Father/Husband Name : முத்தையா |
| Age : 53 | Village : சாத்தூர் |
| Taluk : | Calling : சிறப்பு சார்பு ஆய்வாளர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the Feb 12, 2026 4:05 PM

(Accused not present. Petition U/s. 317 Cr.P.C filed and allowed)

**முதல் விசாரணை** :-

1. நான் தற்போது வெம்பக்கோட்டை காவல்நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன்.

2. கடந்த 21.03.2021ம் தேதி அம்மாபட்டி காவல்நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்தபோது காவல்நிலையத்தில் அன்று காலை 09.30 மணியளவில் பணியில் இருந்தபோது சாத்தூர் அரசு மருத்துவமனையிலிருந்து கிடைக்கப்பெற்ற தகவலை பெற்று சாத்தூர் அரசு மருத்துவமனை சென்று அங்கு காயம்பட்டு சிகிச்சையிலிருந்து சாத்தூர் சுந்தரகுடும்பன்பட்டி வடக்கு தெரு முத்துராஜ் மனைவி பாக்கியலட்சுமி என்பவரை விசாரணை செய்ய அவர் கொடுத்த வாக்குமூலத்தினை பதிவு செய்து காலை 10.30 மணிக்கு நிலையம் வந்து வாக்குமூலத்தின் தன்மைகேற்ப அம்மாபட்டி காவல்நிலைய குற்ற எண் 14/2021 பிரிவுகள் 294(பி), 323, 324, 506(2) இ.த.ச மற்றும் r/w 4 of TNPHW Act ன் கீழ் வழக்கு பதிவு செய்தேன். **(முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

3. பதிவு செய்த முதல் தகவல் அறிக்கையும், அசல் புகார் வாக்குமூலத்தினையும் இணைத்து கனம் குற்றவியல் நீதித்துறை நடுவர் எண் 2 சாத்தூர் அவர்களுக்கும் மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட காவல் அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தும், மேல் நடவடிக்கைக்காக முதல் தகவல் அறிக்கையின் நகலை நிலைய சார்பு ஆய்வாளர் திரு.ராஜ்குமார் அவர்களது பார்வைக்கு வைத்தேன். சார்பு ஆய்வாளர் என்னை 01.07.2021ம் தேதி இவ்வழக்கு தொடர்பாக விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை** –

4. இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள புகார் வாக்குமூலத்தை நான்தான் எழுதினேன். வழக்கின் புகார்தாரருக்கு எழுத தெரியுமா என்றால் தெரியும். அவரை நான் எதற்காக புகார் எழுத கூறவில்லை என்றால் அவருடைய கையில் வலி இருக்கிறது என்று கூறி அவர் எழுதவில்லை. புகார்தாரருக்கு எழுதப் படிக்க தெரியாது என்றாலும், நான் அதை மாற்றிக் கூறுகிறேன் என்றாலும் சரியல்ல. நான் சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில் புகார் வாக்குமூலம் பெறப்படவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள முதல் தகவல் அறிக்கை இந்த வழக்கிற்காக பின்னிட்டு தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

Feb 12, 2026 4:11 PM

Judicial Magistrate 2, Sattur.